

சென்னை எழும்பூர் கோஆப்டெக்ஸ் அலுவலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்ஆர்.காந்தி தலைமையில் 2023–2024 ஆம் ஆண்டிற்கான கைத்தறி மற்றும் துணிநூல் துறைகளின் அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், துணிநூல் துறை ஆணையர் மா.வள்ளலார், கைத்தறி துறை ஆணையர்.கே.விவேகானந்தன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமை! அமைச்சர் கயல்விழி செல்வராஜ் முன்னிலை!

# திருப்பூர் தெற்கில் கலைஞர் நூற்றாண்டு நல உதவிகள்! கனிமொழி கருணாநிதி வழங்குகிறார்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் வேண்டுகோள்!



திருப்பூர், ஜுன் 16 -

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் விடுத்துள்ள அறக்கை வருமாறு:-

திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகம், மாவட்டக் கழக மகளிர் அணி மற்றும் மாவட்டக் கழக மகளிர் தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை (17.6.2023 சனிக்கிழமை) மாலை 3.00 மணியளவில் தாராபுரம், ரோட்டரி மஹாலில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில், கழக மகளிர் அணி துணைச்செயலாளர், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்.

அதுசமயம், திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குபட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் மேற்கண்ட நிகழ்ச்சியில் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

# நீலகிரி மாவட்ட துறை அதிகாரிகளுடன் ஆய்வு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் மேற்கொண்டார்!

நீலகிரி, ஜுன் 16 -

நீலகிரி மாவட்டம் உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், கூட்டுறவுத்துறை, பொது விநியோக திட்டம், தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிகத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சா.ப.அம்ரித் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர், பொதுவிநியோகம் திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் உள்ள நியாய விலைக்கடைகள், அத்தியாவசிய பொருட்களின் நகர்வு மற்றும் நுகர்வு விவரம், புதிய நகரும் நியாய விலை கடைகள், புதிய பகுதி நியாய விலைக் கடைகள் அமைத்தலின் தற்போதைய நிலை, கூட்டுறவு சங்கங்களின் மூலம் நடத்தப்படும் நியாய விலைக்கடைகளில் பழுதடைந்த/சரி செய்யப்படும் நியாய விலைக்கடைகளின் விவரம், நகல் குடும்ப அட்டை கோரிய மனுக்கள் நிலுவை விவரம், குடும்ப அட்டை மாற்றம் கோரிய மனுக்கள் நிலுவை விவரம், கைவிரல் ரேகை பதிவு, அங்கீகாரச் சான்று வழங்கப்பட்ட விவரம், வட்ட வழங்கல் அலுவலர்களின் நியாய விலைக்கடை தணிக்கை விவரம், கூட்டுறவு துறையின் மூலம் பயிர்காப்பீடு திட்டம், சுய உதவிக்குழு கடனுதவி, நகைக்கடன், தோட்டக்கலைத்துறையின் மூலம் பயிர்சாகுபடி விவரம் 2021-2022, 2022-2023 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட வளர்ச்சி திட்ட இயக்கம், நுண்ணீர் பாசனம், அட்மா திட்டம், நீலமலையில் அங்கக வேளாண்மை உள்ளிட்டவைகள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இதுகுறித்து சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவதில் முக்கிய பங்காற்றி வரும் பொது விநியோகத் திட்டத்தினை வலுப்படுத்துவதின் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு நேரடியாக உதவ முடியும் என்பதின் அடிப்படையில் நியாய விலைக்கடைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, தமிழகத்திலுள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கூட்டுறவுத்துறை அமைச்சர் மற்றும் உணவுத்துறை அமைச்சர் ஆகியோர், அரிசிக்கு பதிலாக 2 கிலோ ராகி வழங்கும் திட்டத்தினை பரீட்சார்த்தமாக நீலகிரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள்.

ராகி நார்ச்சத்து, இரும்பு மற்றும் கால்சியம் போன்ற ஊட்டச் சத்துகளின் ஆற்றல் மையமாக இருக்கின்றது. சிறுதானியங்கள் குறைந்த கிளைசெமிக் குறியீட்டை கொண்டுள்ளதால், நீரிழிவு நோய்க்கு எதிரான போராட்டத்தில் சிறந்த தற்காப்பு கருவியாக உள்ளது. எனவே பொதுமக்களிடம் ராகியை வாங்கி பயன்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். வட்ட வழங்கல் அலுவலர்கள் மாதா மாதம் நியாயவிலைக்கடைகளில் ஆய்வு மேற்கொண்டு பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து பரிசோதிக்க வேண்டும். முதல் வரும் கோதுமை, அரிசி, ராகி, சர்க்கரை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகித்த பின்னரே மூட்டைகளில் அடுத்தடுத்து வரும் பொருட்களை விநியோகிக்க வேண்டும். நியாய விலைக்கடையினை சுத்தமாகவும், மழையினால் பாதிக்கப்படாத வகையில் அத்தியாவசிய பொருட்கள் பாதுகாப்பாக பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். பொதுமக்களுக்கு வழங்கும் பொருட்கள் தரமாக இருக்க வேண்டும். விற்பனையாளர்கள் கடை திறக்கும் நேரம் மற்றும் மூடும் நேரம், இருப்புப் பொருட்களின் பட்டியல் பலகை பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் வைக்க வேண்டும்.

மேலும், கூட்டுறவு. சங்கமானது ஏழை, எளியோர்களுக்காக உருவாக்கப்பட்ட சங்கமாகும். கூட்டுறவு சங்கங்களில் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பராபட்சம் பார்க்காமல் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு பயிர் கடன், நகைக் கடன் மற்றும் தேவையான அனைத்து வசதிகளையும் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் செய்து தர வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் 404 நியாய விலைக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. குந்தா வட்டத்தில் உள்ள 33 நியாய விலை கடைகளுக்கும் பரிட்சார்த்த முறையில் (QR கோடு இணைக்கப்பட்ட துவரம் பருப்பு மூட்டைகள் அனுப்பும் திட்டம் கடந்த செப்டம்பர் 2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நுகர்பொருள் வாணிப கழக பண்டகசாலையில் இருந்து அனுப்பப்படும் பொருட்கள் நேராக நியாயவிலைக்கடைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறா அல்லது வேறு எங்காவது செல்கிறதா என்பதை கண்டறிவதற்கு இத்திட்டம் உதவுகிறது.

மூட்டைகளில் வரும் அத்தியாவசிய பொருட்களை எது முதலில் வந்தது என்பதனை எளிதில் தெரிந்து கொள்ளும் வகையில் கலர் நூல் மூலம் அடையாளம் காணப்படுகிறது. இத்திட்டம் நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் அனுப்பப்படும் அரிசி, துவரம் பருப்பு மற்றும் கோதுமை உள்ளிட்ட மூட்டைகளிலும் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 65 நியாய விலைகடைகளுக்கு டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்தும் திட்டம் நடைமுறையில் உள்ளது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடனுதவிகள், சுய உதவி குழுக்களுக்கு கடன், நகைக்கடன் போன்றவை எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ராகி வழங்கும் திட்டம் மிக சிறப்பாக நமது மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து இது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பொது மக்களுக்கு நல்ல தரமான அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை அலுவலர்கள் கண்காணித்து உறுதி செய்திட வேண்டும். தென்மேற்கு பருவமழையை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து முன்னேற்பாடு பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் கருப்புச்சாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிய கழக மண்டல மேலாளர் முருகானந்தம், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை) ராதாகிருஷ்ணன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி. ஷிபிலாமேரி, துணைப்பதிவாளர் (பொது விநியோக திட்டம்) மிர்ஹகள் முகபர் இம்தியாளம், துணை இயக்குநர் (வேளாண் வணிகத் துறை) கிருஷ்ணமூர்த்தி, வட்ட வழங்கல் அலுவலர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில்

# முட்டல் - மோதல் தொடங்கி விட்டது!

## ‘தினகரன்’ நாளேட்டில் தலையங்கம்!



தினகரன்

கூட்டணி உடைகிறதா?

சென்னை, ஜுன் 16 -

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. வுடனான கூட்டணியை உடைத்து வெளியேறும் வேலையை பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை செய்து வருவதும் பொது வெளியில் இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்வதும் பரபரப்பை ஏற்படுத்தி அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் முட்டல் - மோதல் தொடங்கி விட்டது என தினகரன் நாளேடு 14.6.2023 தலையங்கத்தில் விவரித்துள்ளது.

அத் தலையங்கம் வருமாறு:-

ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ., பலவீனமான மாநிலங்களில் கூட்டணியை உறுதி செய்யும் நோக்கில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா சுற்றுப்பயணம் செய்து வரும் வேளையில், தமிழ்நாட்டில் அதிமுகவுடனான கூட்டணியை உடைத்து வெளியேறும் வேலையை தமிழ்நாடு பா.ஜ., தலைவர் அண்ணாமலை செய்து வருவதும், இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் விமர்சனம் செய்து கொள்வதும் தமிழ்நாடு அரசியல் அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. தமிழ்நாடு பா.ஜ., தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்ட பிறகு, ஆளும் தி.மு.க.வை மட்டுமல்ல, பா.ஜ.,வுடன் கூட்டணியில் இருந்து வரும் அதிமுகவையும் தொடர்ந்து தாறுமாறாக விமர்சனம் செய்து வருகிறார்.

வரும் தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி வைத்தால் நான் தலைவர் பதவியில் இருந்து ராஜினாமா செய்வேன் என்றெல்லாம் பா.ஜ., நிர்வாகிகள் கூட்டத்தில் பேசியதாக தகவல்கள் வந்தன. அதிமுக பொதுச் செயலாளர் பதவியை தேர்தல் கமிஷன் உறுதி செய்த பிறகு டெல்லி சென்ற எடப்பாடி பழனிசாமி, அங்கு அமித்ஷாவை சந்தித்தார். அப்போது அண்ணாமலையையும் வரவழைத்து அமித்ஷா சமரசம் செய்து வைத்தார். இனி நாடாளுமன்ற தேர்தல் வரை பிரச்னை இருக்காது என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா குறித்து அண்ணா மலை அளித்த பேட்டி இப்போது அ.தி.மு.க. - பா.ஜ., கூட்டணிக்கு வேட்டு வைத்து விட்டது.

அண்ணாமலை அளித்த பேட்டியில், ‘ஜெயலலிதா மோசமான ஊழல் முதல்வர். ஊழல் வழக்கில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர். அதனால் தான் தமிழ்நாடு ஊழல் மிகுந்த மாநிலமாக மாறியது’ என்று கூறியிருந்தார். அவரது இந்த பேச்சு அதிமுகவின் இரு தரப்பினர் மத்தியிலும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறுகையில், ‘தொண்டர்கள் மனம் பாதிக்கும் வகையில் ஜெயலலிதாவை விமர்சனம் செய்வதை எந்த காலத்திலும் ஏற்க முடியாது. அமித்ஷாவும், நட்டாவும் அண்ணாமலையை கண்டிக்க வேண்டும். இல்லை என்றால் பா.ஜ., கூட்டணி குறித்து அதிமுக ஒரு முடிவு எடுக்க வேண்டியது வரும்’ என்றார்.

முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் இன்னும் ஒருபடி மேலே சென்று, ‘ஜெயலலிதா ஆட்சியை அண்ணாமலை விமர்சனம் செய்தது கழுதைக்கு தெரியுமா, கற்பூரவாசனை என்ற பழமொழியை நினைவுபடுத்துகிறது’ என்று விளாசினார். இந்த பரபரப்புக்கு மத்தியில் அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடந்தது. இதில் பா.ஜ., தலைவர் அண்ணாமலையை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ள்ளது. அந்த தீர்மானம் அண்ணாமலையை கடுமையாக விமர்சனம் செய்து உள்ளது.

அதில், ‘பொதுவெளியில் எந்தவிதமான அரசியல் அனுபவமும், முதிர்ச்சியும் அற்ற பா.ஜ., மாநிலத் தலைவர் அண்ணாமலை திட்டமிட்டு, உள்நோக்கத்துடன், பொறுப்பற்ற முறையில் பேட்டி அளித்துள்ளதற்கு அதிமுக கடும் கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது’ என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. அ.தி.மு.க. தீர்மானத்திற்கு பா.ஜ., பிரமுகர்கள் பதிலடி கொடுக்கத் தொடங்கி உள்ளனர். இதனால் அதிமுகபா.ஜ., கூட்டணியில் முட்டல், மோதல் தொடங்கி விட்டது. நாடாளுமன்ற தேர்தல் வரை இந்த கூட்டணி நீடிப்பது கடினம். பிரதமர் மோடி அல்லது அமித்ஷா இதில் தலையிட்டு சமரசம் செய்யாவிட்டால் நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ., தனித்து போட்டியிடும் சூழல் உருவாகும். அப்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக்கட்சிகளையும் சரமாரியாக விமர்சனம் செய்து வரும் அண்ணாமலை தலைமையிலான பா.ஜ.,வின் உண்மையான பலம் தெரிந்து விடும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

“கடைக்கோடி தொண்டரையும் கைவிடாத கழகம்”

# மறைந்த கழகத் தொண்டரின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் நிதியுதவி!

## ஏ.கே.எஸ்.விஜயன் வழங்கினார்!

திருவாரூர், ஜுன்16 -

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் தெற்கு ஒன்றியப்பகுதியில் கழக செயல் மறவரின் இழப்பினால் வாடிய குடும்பத்திற்கு கோட்டூர் ஒன்றியக்கழகங்களின் சார்பில் ஒரு லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. ஒன்றிய செயலாளர்கள் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால. ஞானவேல் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் இந்த நிதி உதவியை வழங்கினார்.

தி.மு.க. சித்தமல்லி கிளைக்கழக செயலாளராகப் பொறுப்பேற்று திறம்பட செயல்பட்டுவந்த ஜி. மனோகரன் எனும் கழக தோழர் எதிர்பாராத விதமாக இயற்கை எய்தியதை முன்னிட்டு அவரது குடும்பம் தவித்துவந்தது.

இந்த நிலையில் தமிழ்நாடு முதல்வரும் கழக தலைவருமான தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும், கழகத்தின் கடைக்கோடி தொண்டரையும் கழகம் கைவிடாது எனும் கூற்றை மெய்ப்பிக்கும் வகையிலும், கோட்டூர் ஒன்றியக்கழக செயலாளர்கள் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதி நிதியும் , மாநில விவசாய அணி செயலாளருமான ஏ.கே. எஸ்.விஜயன், மனோகரனுடைய திருவுருவப் படத்தினை திறந்து வைத்து, அன்னாரின் குடும்பத்திற்கு கோட்டூர் ஒன்றிய கழகங்களின் சார்பில் ரூபாய் ஒரு இலட்சம் நிதி உதவி வழங்கி ஆறுதல் கூறினார். அப்போது கழக நிர்வாகிகள் , கிராம நிர்வாகிகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் திருவிழந்தூரில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சியில் திருவிழந்தூர் ஊராட்சி வேப்பங்குளம் அ.தி.மு.க. கிளை செயலாளர் ராமலிங்கம் தலைமையில் அ.தி.மு.க., தே.மு.தி.க., பா.ம.க., பா.ஜ.க., உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 800 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் மயிலாடுதுறை மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் ஞான.இமையநாதன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் எஸ்.முருகமணி,பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் பி.முருகமணி, பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இராம.சேயோன், வி.சௌமியன், பெருவீரமணி மற்றும் பலர் உள்ளனர்.

டெல்டா பாசனத்திற்காக முதல்வரால் திறக்கப்பட்ட

# மேட்டூர் அணை தண்ணீர் முக்கொம்பு வந்தடைந்தது!

திருச்சி, ஜுன் 16 -

காவிரி டெல்டா சாகுபடிக்காக கடந்த 12ந்தேதி மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடி தண்ணீரை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்திறந்துவிட்டார். முன்னதாக திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் நடைபெற்ற பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணியை மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கடைமடை வரை தங்கு தடையின்றி தண்ணீர் செல்ல ஏற்பாடு செய்யுமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதற்கிடையே மேட்டூர் அணையில் இருந்த படிப்படியாக தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டு தற்போது 10 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்படுகிறது. இந்த தண்ணீர் சேலம் மாவட்டத்தை கடந்து நாமக்கல், ஈரோடு, ஜேடர் பாளையம், நொய்யல், கரூர், வழியாக நேற்று முன்தினம் மதியம் கரூர் மாயனூர் கதவணையை வந்தடைந்தது. அப்போது 7 ஆயிரத்து 700 கனஅடி தண்ணீர் வந்தது. அந்த தண்ணீர் அப்படியே முழுவதுமாக முக்கொம்புக்கு திறந்துவிடப்பட்டது.

அங்குள்ள பாசன வாய்க்கால்களான கட்டளை மேட்டு வாய்க்கால், புதிய கட்டளை வாய்க்கால்களில் தண்ணீர் திறப்பு குறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் முடிவு செய்வதாக தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மாயனூரில் இருந்து 55 கி.மீ. தொலைவில் உள்ள திருச்சி முக்கொம்பை நோக்கி வந்தது. மாலையில் பெட்டவாய்த்தலைக்கு வந்து அங்கிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முக் கொம்புக்கு நேற்று முன்தினம் இரவு சரியாக 8.30 மணியளவில் வந்தடைந்தது. அதன்பிறகு முக்கொம்பில் இருந்து அந்த தண்ணீர் முழுவதும் காவிரி ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. முன்னதாக சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன. தொடர்ந்து திறக்கப்பட்ட தண்ணீரில் அதிகாரிகள், விவசாய சங்கத்தினர் பூக்களை தூவினர்.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி முக்கொம்பு அணைக்கு விநாடிக்கு 1,900 கனஅடி நீர் மட்டுமே வந்தது.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், தற்போதைய நிலையில் முக்கொம்புக்கு 1,900 கனஅடி நீர் வருகிறது. ஒவ்வொரு மணி நேரமும் நீர்வரத்து மாறுபடும். அடுத்த சில நாட்களில் மேட்டூர் அணையில் திறக்கப்படும் தண்ணீர் முழுவதுமாக நமக்கு வந்தடையும். தற்போது திறந்து விடப்பட்டுள்ள தண்ணீர் கல்லணையை நேற்று மதியம் சென்றடையும் என்றார். அங்கிருந்து நாளை அமைச்சர்கள் பாசனத்திற்காக தண்ணீரை திறந்து வைக்கிறார்கள். கல்லணையில் திறக்கப்படும் தண்ணீர் தஞ்சை மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தின் கடைமடை வரை சென்று சேரும். மேட்டூர் அணையில் இருந்து தற்போது திறந்து விடப்படும் தண்ணீரை பயன்படுத்தி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர், திருச்சி, கடலூர், புதுக் கோட்டை, கரூர், பெரம்பலூர், அரியலூர், உள்ளிட்ட 12 மாவட்டங்களில் சாகுபடி நடைபெற உள்ளது. மேட்டூர் அணையில் இருந்து 90 நாட்கள் குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது. இதன் மூலம் 17 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.